(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

NFWC

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி - I<br>Business Studies - I | Three Hours<br>Gr. 12 (2024) | 32 T I |

சுட்டெண் :……………………………

**அறிவுறுத்தல்கள் :-**


- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01. ‘மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காகச் சந்தைக்கு முன்வைக்கப்படும் எந்தவொன்றும் உற்பத்தி (Product) ஆகும்’ அந்த வகையில் பின்வரும் விடைத்தொகுதியினுள் சேவை உற்பத்திகளை மட்டும் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
    1) பிளாஸ்ரிக் பொருட்கள், உதிரிப்பாகங்கள், பொருத்திகள், செய்திப்பத்திரிகை
    2) உணவுப் பொருட்கள், பாண், சங்கீத உபகரணங்கள், பேரூந்து
    3) தேநீர்ச்சாலை, திரைப்படம், முடியலங்காரம், காப்புறுதி
    4) இயந்திரம், உருக்கு, வங்கி, சங்கீத இசை நிகழ்ச்சி
    5) இயந்திரம் பழுது பார்த்தல், பாதணி மினுக்குதல் (Polishing), சவர்க்காரம் தங்க ஆபரணம்.

(…….)

02. வணிகத்தின் பிரிவுகள் பின்வரும் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தில் தரப்படுகின்றது.




மேலே காட்டப்படும் வரைபடத்தில் 1, 2, 3 என குறிக்கப்படும் இலக்கங்கள் குறித்து நிற்கும் சொற்பதங்கள் முறையே
1) 1 – வர்த்தகம், 2 – உருமாற்றும் கைத்தொழில், 3 – சுரங்கம் அகழ்தல்.
2) 1 – உற்பத்தி, 2 – பொருத்தும் கைத்தொழில், 3 – விவசாயம்.
3) 1 – உற்பத்தி, 2 – ஆக்கக் கைத்தொழில், 3 – வியாபாரம்.
4) 1 – வர்த்தகம், 2 – ஆக்கக் கைத்தொழில், 3 – வியாபாரம்.
5) 1 – வர்த்தகம், 2 – உருமாற்றும் கைத்தொழில், 3 – வியாபாரம். (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03. சுரங்கமறுத்தலும், கனிய ஆகழ்வும், உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில், மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல் வழங்கல் என்பன உள்ளடங்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்.

1) விவசாய உற்பத்தி 2) முதனிலை உற்பத்தி 3) கைத்தொழில் உற்பத்தி
4) இரண்டாம் நிலை உற்பத்தி 5) மூன்றாம் நிலை உற்பத்தி (…….)

04. வணிகத்தினை வகைப்படுத்தக் கூடிய நியதிகள் அல்லாதது, .

1) உற்பத்தியின் தன்மை அடிப்படையில்
2) அளவின் அடிப்படையில்
3) முகாமையின் அடிப்படையில்
4) நோக்கத்தின் அடிப்படையில்
5) உரிமையின் அடிப்படையில் (…….)

05. வணிகங்களின் வாழ்தன்மையில் மக்களின் கொள்வனவு சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதும், வணிகங்கள் ஏற்க வேண்டியேற்படும் கிரயத்தில் தாக்கம் செலுத்தும் சூழலாக அமைவது,

1) பொருளாதாரச் சூழல் 2) சமூக கலாசாரச் சூழல் 3) அரசியல் சூழல்
4) சட்டச் சூழல் 5) மக்கட் சூழல் (…….)

06. மக்கட் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

1) விலை, பணவீக்கம், வட்டிவீதம், சேமிப்பு
2) கல்வி மட்டம், வயது மட்டம், ஆண் பெண் பால் வேறுபாடு, சனத்தொகையின் அளவு
3) இயற்கை வளங்களை கண்டுபிடித்தல், காலநிலை, வானிலை மாற்றங்கள், பூமியின் அமைவிடம், இயற்கை அழிவுகள்.
4) வியாபார ஒப்பந்தங்கள், வியாபாரக் கூட்டுக்கள், உலக அமைப்புக்களின் உருவாக்கம், சர்வதேச சட்டத்திட்டங்கள்.
5) தனிநபர் நம்பிக்கைகள், மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் (…….)

07. வணிகமொன்று சந்தையில் முன்வைக்கின்ற பொருள் அல்லது சேவைக்கு மாற்றுப்பொருள் அல்லது சேவையினை முன்வைக்கின்ற சூழல் காரணியைக் குறிப்பது.

1) வாடிக்கையாளர்
2) வழங்குநர்
3) போட்டியாளர்
4) சந்தையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கின்ற புதிய வணிகர்கள்
5) பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர். (…….)

08. வணிகமொன்றின் நீண்ட கால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு உதவும் அக்கறை செலுத்தும் தரப்பினராகக் கருதப்படுபவர்.

1) வாடிக்கையாளர் 2) கடன் கொடுத்தோர்கள் 3) ஊழியர்கள்
4) முகாமையாளர் 5) வழங்குநர்கள் (…….)

09. வணிகமொன்றினால் நிறைவேற்றப்படும் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. தொழில் பாதுகாப்பு
B. வேலைவாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்.
C. பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.
D. கழிவுப் பொருள் முகாமைத்துவம்
E. நியாயமாக நடந்து கொள்ளல்.
F. சமத்துவமான நிலை
G. பசுமை உற்பத்தி

மேற்படி சமூகப் பொறுப்புக்களில் சமூகம் சார்ந்த சமூகப் பொறுப்புக்களை மட்டும் எடுத்துக் காட்டும் எழுத்துக்களைக் குறிப்பது.

1) A, C, D 2) B, E, F 3) B, F, G
4) B, D, G 5) A, B, C (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. வணிகமொன்று பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் அல்லாதது.
   1) உற்பத்தியும் நுகர்வும்   2) பூரண வேலைவாய்ப்பு   3) இடர் முகாமைத்துவம்
   4) சர்வதேச வியாபாரம்   5) நியாயமான வகையில் போட்டியிடல்   (…….)

11. இலத்திரனியல் தபால் மூலம் கிடைக்கப்பெற்ற வணிகங்களின் சில விளம்பர வாசகங்கள் கீழே தரப்படுகின்றன.
   "உமக்கு அதிஷ்ட இலாபப் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது"
   "உமக்கு வெளிநாட்டுப் பயண விமானப் பயணச் சீட்டு கிடைக்கப் பெறவுள்ளது"
   "நீங்கள் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றினை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்"
   மேற்படி வாசகங்களினால் வணிகமொன்றினால் மீறப்பட்டுள்ள விடயம் ஒன்றாகக் கருதப்படக் கூடியது,
   1) வணிகச் சமூகப் பொறுப்புக்களாகும்.
   2) வணிக ஒழுக்க விழுமியங்களாகும்.
   3) மனித உரிமைகளாகும்.
   4) அரச கொள்கைகளாகும்.
   5) நுகர்வோரின் உரிமைகளாகும்.   (…….)

12. "பொருளாதாரமொன்றின் நிலைப்புத்தன்மையானது அக மற்றும் புற ரீதியான விலை நிலைப்புத் தன்மையில் தங்கியுள்ளது" பொருளாதாரமொன்றின் புற ரீதியான நிலைப்புத் தன்மையினை இனங்காட்டுவது.
   1) பண வீக்கத்தை நிலையான மட்டத்தில் பேணல்.
   2) வட்டி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல்.
   3) விலை மட்டத்தை நிலையான மட்டத்தில் பேணல்.
   4) வெளிநாட்டு செலாவானி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல்.
   5) அரசின் வரிக் கொள்கையினை நிலையான மட்டத்தில் வைத்திருத்தல்.   (…….)

13. அரசினால் விதிக்கப்படும் நேர் வரிகளை மட்டும் உள்ளடக்கிய விடை தொகுதியினைத் தெரிவு செய்க.
   1) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, சுங்க வரி, கம்பனி வரி
   2) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி
   3) மூலதன இலாபத்தின் மீதான வரி, சுங்க வரி, உற்பத்தி வரி
   4) வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, நிறுத்தி வைத்தல் வரி
   5) கம்பனி வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, உற்பத்தி வரி   (……..)

14. நுகர்வோர் பொறுப்பொன்றாகக் கருதப்பட முடியாதது
   1) இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளல்.
   2) அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை.
   3) தொடர்ச்சியான பங்களிப்பு
   4) சமூகம் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
   5) சூழல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15. அரசாங்கம் ஒன்றின் இலக்குகள் X நிரலிலும் அவ்வாறான இலக்குகளை அடைவதற்கு வணிகத்துறையின் பங்களிப்புக்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. முறையான பொருளாதார அபிவிருத்தியும், வளர்ச்சியும் | A. தளம்பலற்ற விலையிடலைப் பேணல். |
| 2. நிறைதொழில் மட்டம் | B. மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்தல். |
| 3. பொருளாதார உறுதிப்பாடு | C. வணிக நடவடிக்கைகளின் போது சூழலுக்கு நேயமாகச் செயற்படல். |
| 4. நிலைபேறான அபிவிருத்தி | D. புதிய தொழில்வாய்ப்பினை உருவாக்குதல். |

X நிரலில் காட்டப்பட்டுள்ள அரசின் இலக்குகளுக்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள வணிகங்களின் பங்களிப்புகளைச் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) A, B, C, D 2) B, D, A, C 3) B, D, C, A 4) A, C, D, B 5) D, C, B, A (……..)

- ***16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.***

16. அ) மனித தேவைகள், விருப்பங்கள் நிறைவேற்றப்படுவது ……………………………….. இன் மூலம் ஆகும்.

ஆ) …………………… விளைவெமான்றாக மிகை உற்பத்தி ஏற்பட்டதுடன் இதன் விளைவாக ……………………… உருவானது.

17. அ) பொருட்களையும், சேவைகளையும் ஆக்குதல் தொடர்பாக மனிதர்களுடைய உடல், உள ரீதியான பங்களிப்பு ……………………………… எனப்படுவதோடு, வணிகமொன்றின் விவேகச் செயற்பாடுகளின் திரட்சி …………………… என அழைக்கப்படும்.

ஆ) வணிகமொன்றில் தரமான பொருட்கள், சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ……………..………… உம் வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு ………………….. உம் வணிகமொன்றில் அக்கறை கொள்கின்றன.

18. அ) …………………………………… சூழல் காரணியினால் வணிகமொன்றிற்கான சந்தை உருவாகுவதுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் மாறுவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்யும் சூழலாக ………………………. காணப்படுகின்றது.

ஆ) வணிகமொன்றின் அகச் சூழலை ஆய்வு மூலம் (1) …………………………… (2) ……………………… அறிந்து கொள்ள முடியும்.

19. அ) வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக் கூடிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ……………………….……… ஆகும்.

ஆ) அரசின் வருமானங்கள், செலவுகள் தொடர்பாக இடம்பெறும் கருமங்கள் …………………………. ஆகும்.

20. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைக்கான உதாரணங்கள் கீழே தரப்படுகின்றது.
உதாரணத்திற்கு பொருத்தமாக அரசு செல்வாக்குச் செலுத்தும் முறையினை இடைவெளியில் குறிப்பிடுக.

அ) வீதி பராமரிப்பு ………………………………………

ஆ) வியாபாரக் கட்டளைச் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் …………….…………..

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.***

*21.* வணிகமொன்றின் படிமுறை ரீதியான வளர்ச்சி கட்டங்களைக் குறிப்பிடுக..

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

*22.* வணிகச் சூழலைக் கற்பதனூடாக வணிகரொருவர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் நான்கு தருக.

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

*23.* வணிகமொன்றின் வழங்குநர்கள் வாய்ப்பாக அமையும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

*24.* வணிகமொன்றினால் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

*25.* சர்வதேச நுகர்வோர்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளைக் குறிப்பிடுக.

(i) ……………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………

(iii) ……………………………………………………………………………………………………

(iv) ……………………………………………………………………………………………………

(25x2 = 50 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

NFWC

**வணிகக்கல்வி - II**
**Business Studies - II**

Gr. 12 (2024) | 32 | T | II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

**01.** யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சாமந்தி என்பவர் நவநாகரிக ஆடை வடிவமைப்பில் பட்டம் பெற்றவராவார். இவர் சுயமாக முயற்சியாண்மை ஒன்றினை ஆரம்பிக்கும் பொருட்டு ஆடைகள் தைக்கும் தொழிலகம் ஒன்றினை வீட்டின் ஒரு பகுதியில் ஆரம்பித்திருந்தார். தொழிற்சாலைக்குத் தேவையான தையல் இயந்திரங்கள், கணினி என்பவற்றைக் கொள்வனவு செய்ததுடன், தனது நண்பியான ராகவியை முகாமையாளராக நியமித்து தையல் பயிற்சி பெற்ற எட்டு ஊழியர்களையும் வேலைக்கமர்த்திக் கொண்டார். இவர் கணினியின் உதவியுடன் ஆடைகளை வடிவமைத்ததுடன். தனது இறுதி உற்பத்திகளை இணையத்தளத்தில் காட்சிப்படுத்தி அவற்றிற்கு கிடைக்கும் கட்டளைக்கேற்ப தனது உற்பத்திகளை மேற்கொண்டார்.

i) அ) மேற்குறித்த நிகழ்வில் வெளிப்படுத்தப்படும் மனித தேவை யாது?

ஆ) மேலே (i) (அ) வில் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்ய பல்வேறுபட்ட விருப்பங்கள் உருவாகலாம். அவ்வாறு உருவாகும் விருப்பங்களில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக.

ii) அ) சாமந்தி வணிகத்தினால் நிறைவேற்றப்படும் அடிப்படையான பிரதான வணிகக் கருமங்கள் (Main business activities) இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகம் பொருளாதார வாழ் தன்மைக்கு பங்களிப்புச் செய்யும் முறைகள் இரண்டு தருக.

iii) மேற்குறித்த வணிகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வணிகக் கருமங்களுக்கு (Business functions) உதாரணம் தருக.

a. சந்தைப்படுத்தல்
b. உற்பத்தி
c. மனிதவளம்
d. தகவல் முகாமைத்துவக் கருமங்கள்

(02 புள்ளிகள்)

iv) மேற்படி வணிகம் பயன்படுத்தும் பின்வரும் உற்பத்திக் காரணிகளுக்கு (உள்ளீடுகள்/ வளங்கள்) உதாரணம் ஒவ்வொன்று தருக.

a. நிலம்
b. உழைப்பு
c. அறிவு
d. தகவல்கள்

(02 புள்ளிகள்)

v) சாமந்தி வணிகத்தின் அகச் சூழல் காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றிற்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)

(5 x 2 = 10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**02.**

i) அ) பொருட்கள், சேவைகளுக்கான வேறுபாடுகள் இரண்டு தருக.

ஆ) அண்மிய சூழல் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii) கீழே சில நடவடிக்கைகள் தரப்படுகின்றன அவை வணிக நடவடிக்கையொன்றா? இல்லையா? என்பதைக் குறிப்பிடுக.

a. விமலா தனது மகளின் பிறந்த நாளுக்குத் தேவையான சிற்றுண்டிகளை தானே தயாரித்துக் கொண்டார்.

b. கமலன் தனது பெயரிலிருந்த மோட்டார் காரினை தனது நண்பனான அருணுக்கு விற்பனை செய்தார்.

c. நெய் உற்பத்தியினை மேற்கொள்ளும் ரங்கன் நெய் போத்தல்களை சில்லறை வியாபார நிறுவனங்களுக்கு விற்பனை செய்தல்.

d. மோகன் தனது வீட்டுத் தோட்டத்தில் மேலதிகமாக உற்பத்தி செய்யும் வல்லாரை கீரையினை அயலில் உள்ள மரக்கறி விற்பனை நிலையத்திற்கு விற்பனை செய்தல்.

(02 புள்ளிகள்)

iii) அ) கீழே இரண்டு செய்தித் தலைப்புக்கள் தரப்படுகின்றன. அவற்றிற்குப் பொருத்தமான புறச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

a. தற்போது நாட்டில் நிலவும் வளி மாசடைதல் தொடர்பான காலநிலை மாற்றம் காரணமாக பாடசாலை மாணவர்கள் முகக் கவசம் அணிவது சிறந்தது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

b. மேலைத் தேய நாடுகளில் சூரிய ஒளியில் இயங்கும் மோட்டார் வாகனங்கள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றனர்.

ஆ) பொருளாதாரச் சூழல் காரணிக்குள் உள்ளடங்கும் விடயங்கள் நான்கு தருக.

(02 புள்ளிகள்)

iv) பின்வரும் எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துக.

a. சந்தை b. பண்டமாற்று முறை

(02 புள்ளிகள்)

v) நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று சமமான கோபுரங்களையும் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(5 x 2 = 10 புள்ளிகள்)

**03.** i) வணிகங்களின் நோக்கங்கள் நான்கு தருக.

(02 புள்ளிகள்)

ii) வணிகங்களுக்கு துணையாக அமையும் சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

iii) புத்தகம் மற்றும் எழுது கருவிகள் விற்பனையகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிட்டு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் ஒவ்வொன்று தருக. (02 புள்ளிகள்)

vi) கடதாசி உற்பத்தித் தொழிற்சாலையொன்று சூழலின் நிலைபேறான தன்மைக்காக செயற்படும் போது விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(02 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

v) அ) அரசின் பேரினப் பொருளாதார நிலைப்புத் தன்மையைப் பேண பின்பற்றப்படும் கொள்கை யாது?

ஆ) அரச செலவுக்குள் உள்ளடங்கும் செலவுகளின் வகைகள் இரண்டினையும் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்

(5 x 2 = 10 புள்ளிகள்)

**04.** i) பாடசாலை ஒன்றில் காணப்படும் பின்வரும் அகச் சூழல் காரணிகள் பலம் மற்றும் பலவீனமாக அமையும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தருக.

a. ஆசிரியர்கள் b. அதிபர்

ii) போக்குவரத்துச் சேவை வழங்கும் நிறுவனமொன்று கீழே தரப்படும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றன.

a. பத்து சாரதிகளையும், நடத்துநர்களையும் வேலைக்கமர்த்தியிருத்தல்.
b. தனக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களின் தொழில் பாதுகாப்பிற்காக வணிக உரிமையாளர் ஊழியர் பொறுப்புக் காப்புறுதி செய்திருத்தல்.
c. நியாயமான கட்டணத்தில் உயர்தரமான போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.
d. எதிர்காலத்தில் சூரிய ஒளியில் (Solar system) இயங்கும் மோட்டார் வாகனங்களை பாவிப்பதற்கு உத்தேசித்திருத்தல்.

மேலே தரப்பட்ட சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படும் தரப்பினரைக் குறிப்பிடுக.

iii) அ) வணிகமொன்று சந்தைப்படுத்தலுக்கான ஒழுக்கநெறிகளை பின்பற்றுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் இரண்டு தருக.

ஆ) சமய வழிபாட்டுத் தலமொன்றிற்கு உட்பிரவேசிக்கும் போது மாணவர்களாகிய நீங்கள் பின்பற்ற வேண்டிய நற்பழக்கவழக்கங்கள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

iv) வணிகமொன்று சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.

(02 புள்ளிகள்)

v) வணிகமொன்றின் புறச்சூழல் காரணிகளை ஆய்வு செய்வதன் மூலம் வணிகரொருவர் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

(5 x 2 = 10 புள்ளிகள்)

**05.** i) வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றை கட்டியெழுப்பும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

ii) ‘அரசிற்கும் வணிகத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பொன்றைக் கட்டியெழுப்புவது மிக அவசியமானதொன்றாகும்’ இக்கூற்றை விளக்குக. (02 புள்ளிகள்)

iii) இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதனால் உள்ளூர் வணிகங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

iv) சுயாதா தனது பிரதேசத்திலுள்ள சிறிய கடையிலிருந்து பழப்பாகு போத்தல் ஒன்றினைக் கொள்வனவு செய்யும் போது அப்போத்தலில் காலாவதித் திகதி மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இது பற்றி உரிமையாளரிடம் கேட்கப்பட்ட போது திருப்திகரமான பதில் அளிக்கப்படவில்லை. மேற்கூறிய சம்பவத்தில் மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

v) பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

a. வங்கி வட்டி வீதம் b. திறந்த சந்தை நடவடிக்கை

(02 புள்ளிகள்)

(5 x 2 = 10 புள்ளிகள்)

**06.** i) இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம் வணிகங்களுக்கு வழங்கும் சேவைகள் நான்கு தருக.

(02 புள்ளிகள்)

ii) 4R எண்ணக்கரு தொடர்பாக சில உதாரணங்கள் தரப்படுகின்றது.

a. பிளாஸ்ரிக் பைகளுக்குப் பதிலாக துணிகளிலான பைகளை (Bag) பயன்படுத்துதல்.

b. பொருட்களை கொள்வனவு செய்யும் போது நீடித்து நிலைத்திருக்கும் பொருட்களை கொள்வனவு செய்தல்.

c. கழிவு கடதாசிகளைப் பயன்படுத்தி முட்டைகளை பாதுகாப்பதற்கான பெட்டிகளை தயாரித்தல்.

d. பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி விளையாட்டு வீரர்களுக்கான வெற்றி பதக்கங்களைத் தயாரித்தல்

மேற்குறித்த உதாரணங்களுக்குப் பொருத்தமான கழிவு முகாமைத்துவ எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii) அ) ‘நுகர்வோர் பாதுகாப்பு’ என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) பின்வரும் நியமங்களுக்குப் பொருத்தமான சான்றுப்படுத்தல் முறைகளை எழுதுக.

a. ISO 45001 b. ISO 37001 (02 புள்ளிகள்)

iv) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் பின்வரும் தரப்பினருக்குக் கிடைக்கும் நன்மைகள் இவ்விரண்டு தருக.

a. நுகர்வோர் b. வணிகர்

(02 புள்ளிகள்)

(5 x 2 = 10 புள்ளிகள்)